






Metro லீடர்

# மெட்ரோ LEADER

தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'








லீடர்: 04 | இதழ் - 276 | 18.09.2024 | பக்கங்கள்: 05 | editorml21@gmail.com | விலை: 75/-


# நாமல் ராஜபக்ஷ போட்டியிலிருந்து விலக வேண்டும்!



## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்க்ஷவிடம் தொடம்பஹால ராஹுல தேரர் வேண்டுகோ

மஹிந்த ராஜபக்ஷவுக்கு உண்மையில் நாட்டு பற்று இருக்குமாயின் நாமல் ராஜபக்ஷவுக்கு அறிவுரை வழங்க வேண்டும். நாமல் ராஜபக்ஷ போட்டியில் இருந்து விலகி ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என தொடம்பஹால ராஹுல தேரர் தெரிவித்தார்.

02 ⏭

# வாய்ப்புக் கேட்போரிடம் நாட்டை ஒப்படைத்து விடாதீர்கள்!


## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



பொருளாதார வீழ்ச்சியின் பின்னர் மிக வேகமாக முன்னேறிய ஒரே நாடு இலங்கை என்பதை சர்வதேச சமூகம் தற்போது ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், அவ்வாறான தொரு புரட்சியை செய்ததன் மூலம் அடுத்த 05

02 ⏭

# சம்மாந்துறையில் துப்பாக்கிச்சூடு - ஒருவர் பலி



வீடு ஒன்றில் ஏற்பட்ட துப்பாக்கி சூட்டில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார். இச்சம்பவம் ஒன்று சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றிலுள்ள வீடு ஒன்றில் சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் 71 ஏ மல் 15 வீதி புளொக் மேற்கு-2 பகுதியை சேர்ந்த 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான பக்கீர் முஹையதீன் றோஜான் என்பவரே இச்சம்பவத்தில் அந்த இடத்தில் உயிரிழந்துள்ளார்.

02 ⏭

# தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிக்க அரியநேந்திரன் களமிறக்கப்பட்டுள்ளார்

## மட்டக்களப்பில் ரிஷாட் எச்சரிக்கை!

தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் வெற்றி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்குச் செல்வதைத் தடுப்பதற்காக, முகவர்கள் களமிறக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து, மட்டக்களப்பில் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

02 ⏭



# நான் விவாதத்திற்கு தயார்



அரசாங்கம் ஏற்கனவே அமுல்படுத்திய வேலைத் திட்டத்திற்கே சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு என

02 ⏭



# தேர்தல் கடமைக்காக பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்!



ஜனாதிபதி தேர்தல் பாதுகாப்பு மற்றும் ஏனைய கடமைகளுக்காக 63,000 பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

02 ⏭

## நாமல் ராஜபக்ஷ போட்டியிலிருந்து...

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை (17) இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தலதா மாளிகை இருந்தால் மாத்திரமே பௌத்த சாசனத்தை பாதுகாக்க முடியும். தலதா மாளிகையின் இருப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு எம்மால் கைகளை கட்டிக் கொண்டு இருக்க முடியாது.

ஒரு சில ஜனாதிபதி வேட்பாளர்களின் கொள்கை பிரகடனம் பௌத்த சாசனத்துக்கு எதிராக உள்ளது. தேசிய கொடியையும், பௌத்த கொடியையும் மாற்றியமைப்பதாக குறிப்பிடுகிறார்கள். இவ்வாறான நிலை ஏற்பட்டால் பௌத்த சாசனம் இல்லாதொழியும்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தீர்மானமிக்கது. நாட்டு மக்கள் சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டுக்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். உண்மையில் சேவையாற்றியிருந்தால் அவர் தனது மகனான நாமல் ராஜபக்ஷவுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ போட்டியில் இருந்து விலகி ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பதை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நாமல் ராஜபக்ஷவுக்கு இன்னும் காலம் உள்ளது. எதிர்காலத்தில் அவர் போட்டியிடுவதாக இருந்தால் நிச்சயம் ஆதரவு வழங்குவோம். இந்த முறை ஜனாதிபதித் தேர்தல் பொருளாதார காரணிகளை முன்னிலைப்படுத்தியதாக உள்ளது ஆகவே ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மீண்டும் தோற்றம் பெற வேண்டும்.

2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எடுத்த தீர்மானத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதற்கு ஆதரவு வழங்கினோம். ஆகவே அந்த தீர்மானத்தை தொடர்ந்து செயற்படுத்துமாறு கேட்கிறோம் என்றார்.

## வாய்ப்பு கேட்போரிடம் நாட்டை...

வருடங்களில் நிச்சயமாக நாட்டை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்ல முடியும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இவ்வேலைத் திட்டத்தில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்த ஜனாதிபதி, "வாய்ப்பு" கேட்கும் அரசியல்வாதிகளிடம் தமது எதிர்காலத்தை ஒப்படைத்து, நாட்டையும் எதிர்காலத்தையும் இருளடையச் செய்ய வேண்டாம் என்று மக்களைக் கேட்டுக்கொண்டார்.

மினுவங்கொடையில் நேற்று (17) பிற்பகல் இடம்பெற்ற "ரணிலால் இயலும்" வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மக்கள் பேரணியில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

இந்த மக்கள் பேரணியில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் குறிப்பிடுகையில்,

இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக 03 பிரதான அரசியல் கட்சிகள் நாட்டுக்காக ஒன்றிணைந்துள்ளன. சஜித்துக்கு வழங்கப்படும் வாக்கு, அநுரவுக்கு தட்டில் வைத்து வழங்கும் வாக்காகும் என ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களிடம் தெரிவித்த ஜனாதிபதி, அதேபோன்று நாமலுக்கு அளிக்கப்படும் வாக்கும் அநுரவுக்கு தட்டில் வைத்து வழங்கும் வாக்கு என்பதை பொதுஜன பெரமுனவில் உள்ள அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் கூறியதாவது:

செப்டம்பர் 21 உங்களுக்கு மிக முக்கியமான நாள். 2022 இல் இந்த நாடு பெரும் நெருக்கடியில் சிக்கியது. உணவு, மருந்து, எரிவாயு மற்றும் எரிபொருளுக்காக மக்கள் வரிசையில் காத்திருந்தனர். உணவோ உரமோ இருக்கவில்லை. நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் சரிந்தது. அப்போது அரசியலும் சரிந்தது. பிரதமரும் அமைச்சரவையும் இராஜினாமா செய்யும் நிலை ஏற்பட்டது.

ஆட்சியைப் பொறுப்பேற்க யாரும் முன்வரவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் ஓடிவிட்டார். இந்த அரசாங்கத்தை நாங்கள் ஏற்க மாட்டோம் என ஹர்ஷ டி சில்வா பகிரங்கமாக தெரிவித்தார். முன்னாள் விவசாய அமைச்சர் அனுர குமார திஸாநாயக்கவைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த நபர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க, செப்டம்பர் 21 அன்று உங்கள் எதிர்காலத்தை அவர்களிடம் ஒப்படைப்பீர்களா? என்று மக்கள் சிந்திக்க வேண்டும். திசைகாட்டிக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்க, உங்கள் எதிர்காலத்தைப் பணயம் வைக்க வேண்டுமா? என்று நான் கேட்கிறேன்.

## சம்மாந்துறையில் துப்பாக்கிச் சூடு...

திங்கட்கிழமை (16) இரவு 10.45 மணி அளவில் குறித்த துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தம்பி மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டவர் என கூறப்படும் சந்தேக நபரான சகோதரரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிக்க...

தொடர்ந்து பேசிய அவர்,

ஊழல்வாதிகளையும் இனவாதிகளையும் தோற்கடிப்பதற்காகவே, சஜித் பிரேமதாசவை ஆதரிக்கிறோம். தமிழ்மொழி பேசும் சிறுபான்மைச் சமூகங்களின் தலைமைகளும் சஜித் பிரேமதாசவையே ஆதரிக்கின்றன. மலையகக் கட்சிகள் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகள் எல்லாம் இனவாதத்தைத் தோற்கடிக்க ஒன்றுபட்டுள்ளன.

கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் நடந்த கூட்டங்களில் பங்கேற்றுவிட்டுத்தான் மட்டக்களப்பு கூட்டத்துக்கு வந்தேன். அதிகளவான தமிழ் மக்கள் அக்கூட்டங்களில் பங்கேற்றிருந்தனர். இலங்கை தமிழரசுக் கட்சியும் சஜித் பிரேமதாசவையே ஆதரிக்கிறது. இதனால், அமோகமான தமிழ் வாக்குகள் சஜித்துக்கே கிடைக்கவுள்ளன. இதை மலினப்படுத்துவதற்காகவே இம்மாவட்டத்தைச் சேர்ந்த அரியநேந்திரனை பேரினவாதம் களமிறக்கியுள்ளது.

நமது இருப்புக்கள், பாதுகாப்பு மற்றும் உரிமைகளை ஒருசில ரூபாய்க்களுக்காக விற்க முடியுமா? எனவேதான், நிதானமாகச் சிந்திக்குமாறு கோருகிறோம். கடந்த தேர்தலிலும் எமது ஆலோசனைகளைப் புறக்கணித்து, ஒருசிலர் கோட்டாபயவுக்கு ஆதரவளித்தனர். என்ன நடந்தது? நடந்தவற்றை நினைத்துப்பாருங்கள்.

ஐந்து வருடங்களுக்கு ஆட்சியை ஒப்படைக்கப் பொருத்தமானவர் யார்? சிறுபான்மைத் தலைமைகள் எல்லாம் சஜித்தை ஆதரிப்பது ஏன்? எதிர்க்கட்சித் தலைவரான இவரது சேவைகள் நாடு முழுவதும் வியாபித்துள்ளன. இந்த நம்பிக்கையோடுதான் நாம் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கிறோம்" என்று கூறினார்.

## நான் விவாதத்திற்கு...

அரசாங்கம் ஏற்கனவே அமுல்படுத்திய வேலைத்திட்டத்திற்கே சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு என தெரிவித்த ஜனாதிபதி, மக்கள் முன் வந்து பொய்யான வாக்குறுதிகளை வழங்கும் சஜித்துக்கோ அல்லது அநுரவுக்கோ நாட்டை முன்னேற்றுவதற்கான வேலைத்திட்டம் இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெல்லவாயயில் நடைபெற்ற "ரணிலால் முடியும்" வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது

முன்னாள் விவசாய அமைச்சர் அநுர குமார என்னை விவாதத்திற்கு அழைத்தார். நான் அதற்கு தயார் என்று அறிவித்துள்ளேன். ஆனால் இன்னும் அழைப்பு வரவில்லை. இன்றும் நான் அதற்கு தயாராக இருக்கிறேன். அவர்களால் ஏன் விவாதத்திற்கு வர முடியாது? அவர்களிடம் எந்த திட்டமும் இல்லை என்பதாலே பின்வாங்குகின்றனர்.

அனைத்தையும் இலவசமாக கொடுப்பது பற்றித் தான் சஜித் பேசுகிறார். தலை வலியையும் அவர் இலவசமாக கொடுப்பார். ஆனால் நாம் கடினமாக பெற்ற வெற்றியைப் பாதுகாத்து முன்னேற வேண்டும். இதற்காக செப்டம்பர் 21 ஆம் திகதி கேஸ் சிலிண்டருக்காக அனைவரும் வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## தேர்தல் கடமைக்காக...

வாக்கு எண்ணும் நிலையங்கள் மற்றும் வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்பிற்காக பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொருளாதார நிலையங்களின் பாதுகாப்பிற்காக இராணுவம் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர். பொலிஸாருக்கு உதவியாக 10,000 சிவில் பாதுகாப்பு படையினர் ஈடுபடுத்தப்பட உள்ளனர். மேலும், நடமாடும் பயணங்களுக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நியமிக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஜனாதிபதி தேர்தல் - 2024



## பிள்ளையான் போன்ற ஈஸ்டர் குண்டு வெடிப்புடன் தொடர்புடைய கொலையாளிகள் கைது செய்யப்படுவார்கள்

### சஜித் பிரேமதாச தெரிவிப்பு

**(பாறுக் ஷிஹான்)**



மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையில் களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருக்கும் இலங்கை தமிழரசுக்கட்சியின் மாவட்ட, தொகுதி, பிரதேச, கிராமிய குழு உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், மத்திய குழு உறுப்பினர்கள், மாவட்ட இளைஞர் அணி, மகளின் அணியுடனான விசேட கலந்துரையாடல் ஞாயிற்றுக் கிழமை (15) இடம்பெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர் பிரச்சினைக்கான தீர்வினையும், அம்பாறை கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான தீர்வினையும், ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பான பிரதான சூத்திரதாரியினையும், அதனோடு தொடர்புடைய சகலரையும் கைது செய்து நீதியை நிலை நாட்டுவதோடு, பிள்ளையான் போன்ற கொலையாளிகளும் கைது செய்யப்பட வேண்டும் எனவும், வாகரை இல்மனைற் அகழ்வுடன் தொடர்புடைய காணி திருடர்கள், சட்ட விரோத மண் கடத்தல் கார கும்பல் உட்பட பல கள்வர்கள், மட்டக்களப்பிலிருந்து அகற்றப்பட வேண்டும் எனவும், இவ்வாறான விசமிகள் கைது செய்யப்பட வேண்டும் எனவும் கருத்து தெரிவித்தார்.

இவ்வாறான மட்டக்களப்பு மற்றும் அம்பாறை உட்பட அனைத்து பிரதேசங்களிலும் குறிப்பாக வடக்கு கிழக்கில் காணப்படும் தமிழர்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வையும் தமது அரசாட்சியில் இதற்கான நீதி நிலைநாட்டப்படும் என்பதனையும் ஐக்கிய மக்கள் கட்சியினுடைய ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச உறுதியளித்தார். அதனையும் தாண்டி குறிப்பாக நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியில் தான் அமைச்சராக கடமையை ஏற்று இருந்த காலப்பகுதியில் முடிக்கப்படாமல் இருக்கின்ற வீட்டுதிட்ட வேலைகள் அனைத்தும் ஒரு மாத கால பகுதிக்குள் நிறைவுறுத்தப் படுவதாகவும் கருத்து தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், மட்டக்களப்பு மாவட்ட மாநகர சபை முதல்வர் சரவணபவன், இலங்கையில் தமிழரசு கட்சியின் உறுப்பினர்கள், இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞரணி மகளிர் அணி பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்

## இனவாதத்தின் கூடாரமாக ஐக்கிய மக்கள் சக்தி காணப்படுகின்றது

### இறக்காமத்தில் எஸ்.எம்.எம்.முசாரப் எம்.பி

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**



சர்வதேசம் அங்கீகரித்த இனவாதமில்லாத ஆளுமைமிக்க தலைமைத்துவம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. அவ்வாறான ஒரு தலைவரை மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்வது நாட்டு மக்களின் கடமையாகும்.

இந்நாட்டில் அபாயகரமான ஒரு கட்சியாகவும், இயக்கமாகவும் ஜே.வி.பி கட்சி காணப்படுகின்றது. தனது கட்சி சின்னமான மணியை வெளியே கொண்டு வர தைரியம் இல்லாமல் மணியை திசை காட்டியாக ஒளிந்து கொண்டிருக்கின்றார்கள். அங்கேதான் அவர்களது தோல்வி தொடங்கிவிட்டது. நாட்டின் பொருளாதார அழிவுக்கும் அந்தக் கட்சிதான் காரணமாகும்.

பல்கலைக்கழகம் தொடக்கம் அரச நிறுவனங்கள் வரை தொழிற்சங்கள் என்ற போர்வையில் அமைப்புகளை ஏற்படுத்தி போராட்டங்களைச் செய்து காலத்தை வீணடித்து பொருளாதாரம் வளர்ச்சியடையாமல் தடுக்கின்றனர்.

ராஜபக்ஷக்கள் திருடர்கள் என்று கத்துகின்றனர். ராஜபக்ஷக்களை 2005ம் ஆண்டு ஆட்சிக்கு கொண்டுவர உழைத்தவர்கள் ஜே.வி.பி.கட்சியினர்தான். மஹிந்த சிந்தனையை புகழ்ந்து பாராட்டி பேசியவர்கள் இன்று ராஜபக்ஷக்கள் கள்வர்கள் என்று கத்துவது வேடிக்கையாக உள்ளது.

எனவேதான் சர்வதேசம் அறிந்த, இனவாதமில்லாத, இளைஞர்களை முன்னிலைப் படுத்தும் ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களிக்க நாம் எல்லோரும் தயாராக வேண்டும்.

அரசியல் அதிகாரம் இல்லாமல் எல்லோராலும் புறக்கணிக்கப் படும் இறக்காமத்திற்கு எதிர்காலத்தில் நிச்சயமாக அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொடுப்பேன். கடந்த காலத்தில் நான் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றும் எண்ணத்துடனயே இருந்து கொண்டிருக்கின்றேன்.

இறக்காமத்தின் அபிவிருத்திக்காக எனக்குக் கிடைத்த வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டிலும், விசேட நிதி ஒதுக்கீட்டிலும் சமார் 16 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கிவிட்டுத்தான். இந்த மேடையில் பேசிக்கொண்டிருக்கின்றேன்.

நமது அரசியல் வளர்ச்சியை தாங்கிக் கொள்ள முடியாத அரசியல் கைக்கூலிகள் முசாரப் வாக்குறுதியை மீறிவிட்டதாக அபாண்டமான பொய்யைச் சொல்லுகின்றனர்.

பொத்துவில் பள்ளிவாசலில் நான் செய்த சத்தியத்தைக் காப்பாற்றவே இருக்கின்றேன். இலங்கையில் உள்ள எந்தப் பாராளுமன்ற உறுப்பினருக்கும் வாகன பேர்மிட் இன்றுவரை வழங்கப்படவில்லை. அவ்வாறு கிடைக்கும் போது அதனை செய்யவே சித்தமாக இருக்கிறேன்.

ஒரு அமைச்சினைக்கூட சரியாக செய்து முடிக்க துப்பில்லாத சஜித் பிரேமதாசவினால் இந்நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. இன்று இனவாத்தின் கூடாரமாக ஐக்கிய மக்கள் சக்தி காணப்படுகின்றது. அந்த இனவாதக் கூடாரத்தில் ஹக்கீமும், ரிஷாட்டும் இருப்பதை முஸ்லிம்கள் அங்கீகரிக்க முடியாது.

தமது அரசியல் வியபாரத்திற்காக முஸ்லிம்களை பகடைக் காய்களாக பயன்படுத்துகின்றனர். எதிர்வரும் 22ம் திகதியுடன் முஸ்லிம் தலைமைகள் என்று சொல்லும் அரசியல் வியாபாரிகள் கொட்டம் அடங்கிப்போகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஊழலை ஒழித்து, வறுமையை போக்கும் ஆட்சியை உருவாக்கும் விம்பமாக சஜித் பிரேமதாச பார்க்கப்படுகிறார்

### பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ்

**(நூருல் ஹுதா உமர்)**



இந்த நாட்டில் ஊழலை, வறுமை ஒழிக்கும் ஒரு ஆட்சியை உருவாக்குவதற்காக ஊழலை ஒழிப்பதற்கான விம்பமாக சஜித் பிரேமதாச பார்க்கப்படுகின்றார் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச கலந்து கொண்ட மாபெரும் பொதுக்கூட்டம் சாய்ந்தமருது பௌஸி மைதானத்தில் சனிக்கிழமை (14) இடம் பெற்றது. இங்கு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சஜித் பிரேமதாசவின் தந்தை ரணசிங்க பிரேமதாசா இருக்கின்ற போது இந்த நாட்டில் வறுமையை ஒழித்து ஜனசவிய திட்டத்தையும் அறிமுகப்படுத்தி வைத்தார். ஜனசவிய திட்டத்தினூடாக கஷ்டப்படுகின்ற குடும்பத்தில் இருந்து ஆசிரியரை உருவாக்குவதற்காக ஜனசவிய ஆசிரியர் சேவையை உருவாக்கினார். இந்த நாட்டில் முப்பது ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு ஆசிரியர் தொழில் இந்தத் திட்டத்தின் மூலம் கொடுத்ததை யாராலும் மறக்க முடியாது.

அந்த காலத்தில் அரசு வீடுகள் என்பது எட்டாக்கனியாக இருந்தது. சஜித்துடைய தந்தை ரணசிங்க பிரேமதாச தான் ஒரு லட்சம் வீட்டு திட்டம் வந்தது. கடந்த 15 வருட காலமாக நாங்கள் எல்லோரும் இலவு காத்த கிளிகள் போல இருந்தோம். எப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்கு வந்தாரோ அதற்கு பிறகு அவர்களின் ஆட்சியில் எங்களுக்கு வீடு கட்டி தந்திருக்கின்றார்களா ?தொழில் வாய்ப்பை தந்தார்களா? மீனவர்களுக்கான படகுத் துறையை கட்டினார்களா? எங்களின் நகரத்தை அபிவிருத்தி செய்து தந்தார்களா? இலங்கை நாட்டில் வீடு கட்ட வேண்டிய பணத்தை கொள்ளையடித்து சுவிஸ்லாந்திலும், துபாயிலும் பதுக்கி வைத்துவிட்டு இன்று நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள்.

இன்று சஜித் பிரேமதாசவுடன் போட்டி போடுகின்ற எமது நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த சாய்ந்தமருது மண்ணுக்கும் கடந்த வாரம் வந்து போனார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இரண்டு வருடமாக ஆட்சியில் இருக்கின்றார். எமது நாட்டில் வரிசை யுகத்தை இல்லாமல் ஆக்கினார் என்று பலரும் சொல்லலாம். ஆனால் மஹிந்த ராஜபக்ஷவுடன் களவெடுத்தவர்கள் இவருடன் தான் இருக்கின்றார்கள் என்றார்.



நாவிதன்வெளி பிரதேசத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து தேர்தல் பிரச்சாரக் கூட்டம் மற்றும் கட்சிக் காரியாலைய திறப்பு விழா என்பன 12ஆம் கொலனி 2ம் வட்டார அமைப்பாளர் ஏ.ஆர்.பசீல் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது முன்னாள் கல்முனை மாநகர பிரதி முதல்வரும், கட்சியின் பொருளாளருமான ரஹ்மத் மன்சூர், கட்சியின் உயர்பீட உறுப்பினர் ஏ.சீ.ஏ.நாஸர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எம்.பீ.நவாஸ், கட்சியின் முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

**(படம் : ஏ.எச்.எம்.ஹாரீஸ்)**

# ஜனாதிபதி தேர்தல் - 2024

## ஜனாதிபதி தேர்தல் தொடர்பான தெளிவூட்டல் செயலமர்வு

(எம்.எச்.எம்.சியாஜ்)

புத்தளம் மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர்களுக்கு எதிர்வரும் 21 ம் திகதி நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சட்டங்கள் மற்றும் செலவுகள் பற்றிய தெளிவூட்டும் செயலமர்வு இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் புத்தளம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பீ.ஹேரத் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தேர்தல் திணைக்கள ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க, இலங்கை பத்திரிகையாளர் பேரவையின் பணிப்பாளர் நாயகம் திலீப் சந்தன கருணா நாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஊடகவியலாளரும் அரசியலும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டதாகவும் பின்னிப்பினைந்ததாகவே இன்று காணப்படுகின்றது. மேலும் இன்றைய தேர்தல் மேடைகளில் பிரதான கட்சித் தலைவர்களின் சில பேச்சுக்கள் இலங்கை அரசியலை கேள்விக்குறியாக இதுவா இலங்கையின் அரசியல் என்ற கேள்வி எழுவதாக தேர்தல் திணைக்கள ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க செயலமர்வில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

மேற்படி செயலமர்வில் புத்தளம் மாவட்டதில் உள்ள தமிழ் மற்றும் சிங்கள மொழி ஊடகவியலாளர்கள் சுமார் 40 பேர் கலந்து கொண்டதுடன் பாடசாலைகளில் உயர் தரத்தில் அரசியல் பாடம் கற்கும் மாணவிகள் சிலரும் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.



ஜனாதிபதி சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து திருக்கோவில் பிரதேசத்தில் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் கடந்த புதன்கிழமை மாலை (11) இடம்பெற்றது. இக்கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன், ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் தயா கமகே உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(படம் : அஸ்ஹர் இப்றாஹிம்)

## இனவாத போராட்டக் கோஷங்களை தோளில் சுமந்து செல்பவர்கள் சஜித் அணியினர்

### ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார



"நாடு அநுரவோடு" தேசிய மக்கள் சக்தியின் பெருவெற்றிக்கான கூட்டம் அநுராதபுரத்தில் இடம்பெற்றது.

அங்கு கருத்து தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசானாயக்கா,

எங்களுக்கு எதிராக பலவிதமான சேறுபூசல்கள், குறைகூறல்கள், பொய்யான தகவல்களை மொத்தமாக பரப்பி வருகிறார் கள். நாங்கள் அவர்களுக்கு கூறவேண்டியது நீங்கள் தாமதித்துவிட்டீர்கள் என்பது தான். இந்த வெற்றியை இப்போது நிறுத்திவிட முடியாது. இந்த வெற்றியை பெருவெற்றியாக உயர்த்தி வைப்பதுதான் எங்களுடைய பொறுப்பு. நாங்கள் நேற்று அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை, ஒலுவில், சாய்ந்தமருது, சம்மாந்துறை, நிந்தவூர் ஆகிய பல இடங்களில் கூட்டங்களை நடத்தினோம்.

அந்த இடங்களில் முஸ்லிம் மக்கள் பல்லாயிரக்கணக்கில் இந்த நாட்டை மாற்றியமைப்பதற்காக எம்மைச்சுற்றி அணிதிரண்டுள்ள விதத்தை நாங்கள் கண்டோம். அதனால் இலங்கையில் முதல் தடவையாக மிகவும் தனித்துவமான அரசாங்கமொன்று அமையப்போகிறது. அது எப்படிப்பட்ட அரசாங்கம்? இதுவரை காலமும் பிறருக்கு எதிரான அரசாங்கங்களே அமைக்கப்பட்டன. வடக்கு கிழக்கிலுள்ள இனத்துவங்களுக்கு எதிரான அரசாங்கங்கள். அரசியல் மேடைகளில் தேசம் ஆபத்தில். ஏனைய இனங்களைச் சேர்ந்த மக்கள் பெரும்பான்மை இனத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் தேசத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக அவர்களுக்கு வாக்குகளை அளிக்குமாறு கூறினார்கள். மதத்தை காப்பாற்றிக் கொள்ள அவர்களுக்கு வாக்குகளை அளிக்குமாறு கூறினார்கள். ராஜபகஷக்கள் மீண்டும் மீண்டும் கூறிக்கூறி உக்கிப்போன மதவாத, இனவாத போராட்டக் கோஷங்களை இப்போது தோளில் சுமந்து செல்பவர்கள் சஜித் அணியைச் சேர்ந்தவர்களாவர். அந்த போராட்ட கோஷங்கள் ராஜபக்ஷக்களையும் அழித்தொழித்த போராட்டக் கோஷங்களாகும்.

வடக்கு,கிழக்கு, தெற்கு ஆகிய எல்லா பிரதேசங்களிலும் வசிக்கின்ற மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்த அரசாங்கமொன்றை முதல் தடவையாக அமைக்கப் போகிறோம். நாட்என் அனைத்து மக்களினதும் நம்பிக்கையை வென்றெடுத்த அரசாங்க மொன்று. இந்த நாட்டில் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கு இருந்த வரலாற்று ரீதியான வாய்ப்புக்களை இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் கைவிட்டுவிட்டார்கள்.

## எமது நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு அனுபவமுள்ள ஜனாதிபதி ஒருவரே பொருத்தமானவர்

### அலி ஸாஹிர் மௌலானா

**(நாஸர்)**

சீரழிந்து குட்டிச்சுவராகியுள்ள எமது நாட்டை மீளக்கட்டியெழுப்பு வதற்கு அனுபவமுள்ள ஜனாதிபதி ஒருவரே பொருத்தமா னவரென அபிவிருத்தி திட்ட அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானா தெரிவித்துள்ளார்.

தற்போதைய தேர்தல் களத்திலுள்ள சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திசாநாயக்க போன்றவர்கள் நாட்டை ஆளக்கூடிய அனுபவமற்றவர்கள் என்றும் அவர் கூறினார்.

சமூக சேவகரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் வேட்பாளருமான ரஜாய் நசீர் தலைமையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அலி ஸாஹிர் மௌலானா இதனைக் குறிப்பிட்டார்.

இங்கு மேலும் பேசுகையில்- முன்னணி வேட்பாளர்களான ரணில் விக்ரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாச போன்றவர்கள் தமது குடும்ப சகிதம் மக்களுக்கு முன்னால் வருகின்றனர். அது போன்று அனுரகுமார திசாநாயக்கவுக்கு காட்சியளிக்க முடியுமா என்பதை நான் சவாலாக விடுகின்றேன். எனவே தமது சொந்த குடும்பத்தையே சீராக நிருவகித்துக் கொள்ள முடியாதவரை நம்பி இந்த நாட்டினை எவ்வாறு ஒப்படைக்க முடியும் என்பது சவாலாக உள்ளது. இதனைப்பற்றி எமது இளைஞர் யுவதிகளுக்குத் தெரியாதுள்ளது.

அதேபோன்று ரணில் விக்ரமசிங்கவுடன் பல சிறுபான்மைக்கட்சிகள் அதே போன்று தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் கூட்டிணைந்துள்ளார் கள். சஜித் பிரேமதாசவுடனும் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகள் பலர் கூட்டிணைந்து வேலைத்திட்டங்களைச் செய்கின்றார்கள். ஆனால் அனுரகுமாரவுடன் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகள் இல்லாதிருப்பது ஆபத்தானது. தப்பித்தவறி ஆட்சியமைத்தால் அந்த ஆட்சியில் சிறுபான்மைச் சமூகத்திற்கு நடைபெறும் அநீதிகளைத் தட்டிக்கேட்பதற்கு எவருமே இல்லை.

கோட்டாபய ராஜபக்ஷ காலத்திலும் இவ்வாறு நடைபெற்றமை சிறந்த பாடமாகவுள்ளது. எனவே சீரழிந்த நாட்டைக் ஓரளவு கட்யெப்பியுள்ள ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து எமக்கான உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொள்வோம் என்றார்.

## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 50 இலட்சத்திற்கும் மேல் வாக்குகளை பெற்றுக் கொள்வார்

### சாய்ந்தமருதில் அசாத் சாலி





**(நூருல் ஹுதா உமர்)**

தேசிய பட்டியலில் பாராளுமன்றத்திற்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே நாட்டை காப்பாற்ற வந்தார். நாட்டு மக்கள் வாழத் தகுந்த வகையில் நாட்டின் நிலைமையை மாற்றியமைத்தார். அதன் பயனாக இன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 50 இலட்சம் வாக்குகளுக்கு மேற்பட்ட வாக்குகளை பெற்றுக் கொள்வார் என்ற நம்பக்கை உள்ளது என முன்னாள் ஆளுநர் அசாத் சாலி தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் கல்முனைத் தொகுதி ஐ.தே.க அமைப்பாளர் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீல் தலைமையில் நடைபெற்ற இயலும் ஸ்ரீ லங்கா பிரச்சார கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய



அவர்,

முழு நாடும் அனுரவிற்கு என்று சிலர் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். மறு முனையில் சஜித் இப்போதே ஜனாதிபதியாகி விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார். இவர்கள் வேடிக்கை பாத்திரங்கள். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முதிர்ச்சியானவர். இலங்கை வரலாற்று அதிகப்படியான வாக்குகளை பெற்று வெற்றிபெறப்போகும் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவே இருப்பார் என்றார்.

# SPORTS லீடர்

sportsml77@gmail.com

## உகன தேசிய பாடசாலை மாணவி இலங்கை அணியில் இணைவு




**–அஸ்ஹர்இப்றாஹிம்–**

இலங்கை 19 வயதிற்குட்பட்ட தேசிய பெண்கள் கிரிக்கெட் அணியில் அம்பாறை மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய கிராமப்புற பாடசாலையான உகன தேசிய பாடசாலை மாணவி பிரமுதி மெத்சரா இடம்பெற்றுள்ளார். அவுஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள 29 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான சர்வதேச கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை பெற்றுள்ளார்.

### கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில்

## இளவாலை ஐக்கிய வாலிபர் அணி சம்பியன்

**–எம்.ஐ.அஸ்ஹர் –**

அமரர் சிவகுருநாதன் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும் கரப்பந்தாட்ட போட்டி இளவாலை ஐக்கிய வாலிபர் விளையாட்டுக் கழகமும், புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

மூன்று சுற்றுக்களை கொண்ட இப்போட்டியின் முதலாவது சுற்றின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்தி வந்த இளவாலை ஐக்கிய வாலிபர் அணி 25:16 என்ற புள்ளியடிப்படையில் வெற்றியை பெற, இரண்டாவது சுற்றில் கலைமதி தனது அபார ஆட்டம் மூலம் கடும் போட்டியின் மத்தியில் 25:22 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. வெற்றியை தீர்மானிக்கவேண்டி ஆரம்பமாகிய 3ஆவது சுற்று மிகவும் நெருக்கமான புள்ளியிடைவெளியில் ஆரம்பம் முதல் நகர்ந்த போதும் இறுதியில்



25:16 என்ற அடிப்படையில் கலைமதி விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி வெற்றி கொண்டது ஐக்கிய வாலிபர் விளையாட்டுக்கழகம்.

## மட்டக்களப்பு பெற்றி பிக் பாஸ் ஜூனியர் கிரிக்கெட் போட்டியில் பழுகாமம் புள்ஸ் அணி சம்பியன்

**–அஸ்ஹர் இப்றாஹிம்–**

மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் அபிவிருத்தி சபை மட்டக்களப்பு மாஸ்டர் கிரிக்கெட் கிளப் ஆகியன இணைந்து முதல் தடவையாக நடாத்திய 21 வயதுக்குட்பட்டவர்களுக்கான பெற்றி பிக்பாஸ் ஜூனியர் போட்டிகளில் மட்டக்களப்பு பழுகாமம் புள்ஸ் அணி சாம்பியன் மகுடத்தை சூடியது. மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பழுகாமம் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 133 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய காத்தான்குடி லயன்ஸ் அணி 19.1 ஓவர்கள் நிறைவில் 113 ஓட்டங்களை மட்டுமே பெற்று சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது, இதன் மூலமாக 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பழுகாமம் அணி சாம்பியன் மகுடத்தை தனதாக்கியது.



### கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் 75 ஆண்டுகள் நிறைவையொட்டி:

# ஸஹிரியன் பிரிமியர் லீக் சுற்றுப்போட்டி

**–அஸ்ஹர் இப்றாஹிம்–**

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் கல்வி பயின்ற பழைய மாணவர்களை கல்லூரியுடன் இணைக்கும் திட்டத்தின் அடிப்படையில் கல்லூரியின் 75 ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஒழுங்கு செய்துள்ள ஸஹிரியன் பிரிமியர் லீக் (ZPL) கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் சீசன் iii போட்டிக்கான பங்குதாரர் கூட்டம் அண்மையில் கல்லூரி கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் ஸஹிரியன் சசன் பிரிமியர் லீக் சுற்றுப்போட்டியின் சீசன் lII இல் பங்கேற்கும் பழைய மாணவர் அணிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். போட்டி அறிமுகம், போட்டி முறைமை போன்ற விடயங்கள் அணிகளின் பிரதிநிதிகளுக்கு விளக்கக் காட்சி (Presentation) மூலம் தெளிவுபடுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளர், நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். மேலும், அணித் தலைவர்களுக்கு அணி அட்டை (Team Card) இதன்போது வழங்கப்பட்டது.





இப்பத்திரிகை இல.502,பிரதான வீதி, சாய்ந்தமருது -14இல் அமைந்துள்ள மெட்ரோ மீடியா நெறிவேர்க் நிறுவனத்தில் 2024.09.18ஆம் திகதி அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.